2015 செப்டம்பர் 29]

378—

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

***30597—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு ஏதும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பிறக்கின்ற குழந்தைகளுக்குத் தாய்மாமன் சீதனம் தருவதற்கு முன்பாகவே தாய்க்குத் தாயாக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் வயிற்றிலிருந்து தொப்புள் கொடி அறுப்பதற்கு முன்பே முதல் சீதனமாக இதோ என்னுடைய சீதனம் என்று "அம்மா பெட்டகம்" வழங்கிய எங்கள் அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை வணங்குகிறேன். நான் இந்த வினாவை எழுப்பி, அவைக்கு வருமுன்பே ஆலங்குளம் மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்த குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தினை அமைத்துத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தென்காசி, ஆலங்குளம் விவசாயப் பொதுமக்களின் கனவுத் திட்டமாக இருந்த ஐம்புந்தி மேல்மட்டக் கால்வாயை நேற்றையதினம் விதி110—ன்கீழ் ரூ42 கோடியில் அமைத்துக்கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம், ஏழை விவசாயிகளின் விடிவெள்ளி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 379, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

379—

கால்நடைக் கிளை நிலையக் கட்டடம்

***53122—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, கள்ளந்திரியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம் கால்நடை துறைக்கு பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால், ஆட்சியிலே ஆடுகள் முதல் ஆம்புலன்ஸ் வரை அனைத்தையும் அள்ளித் தந்த ஆட்சிக்காலம்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரை கிழக்கு தொகுதி, கள்ளந்திரியிலே உள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்கு கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேற்படி கால்நடைக்